# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 74/பேரூ/2024**
**நாள் : 25.09.2024**

திரு. வி. பாண்டி,
வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு தெற்கு தெரு, க. எண். 7-11-5/3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. வி. பாண்டி என்பவரின் 29.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.07.2024 அன்று பெறப்பட்டு, 74/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு தெற்கு தெரு, க. எண். 7-11-5/3, என்ற முகவரியில் வசிக்கும் திரு. வி. பாண்டி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், 5. வத்தலகுண்டு கிராமம், ஆடுசாபட்டியில் புல எண்.1155/1 பரப்பு 0.10.50 ஏர்ஸ் பட்டா எண். 348, கொண்ட நிலம் எனது தாத்தா சிதம்பரம் என்பவரின் பெயரில் இருந்து வரும் பூர்வீக சொத்தாகும்.

இந்நிலையில் வத்தலகுண்டு கிராமம், ஆடுசாபட்டியில் வசித்து வரும் திருமதி. செல்வி க/பெ துரைப்பாண்டி –1, திரு. செல்வம் த/பெ. ஆறுமுகம் –2 ஆகியோர் எனது பட்டா நிலத்தில் அத்துமீறி வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் துணையோடு பண பலம், அதிகார பலம், ஆள் பலத்துடன் மேற்கண்ட இருவரும் எந்தவிதமான ஆவணங்கள் இன்றி வீட்டை கட்டி குடியிருந்து வருகின்றனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பல புகார் மனுக்கள் அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. எந்தவித ஆவணங்களும் இல்லாத எதிர்மனுதாரர்கள் திருமதி. செல்வி, திரு. செல்வம் ஆகிய நபர்கள் வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு வழங்கும்

திட்டம் மூலமும் மற்றும் பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தின் மூலமும் மோசடியாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக்கொண்டு எனது பட்டா நிலத்தில் எதிர்மனுதாரர்கள் வீடு கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளார்.

மேற்கண்ட நிலத்தில் நிலக்கோட்டை வருவாய் தாசில்தார் ஆய்வு செய்து நிலத்தை அளவீடு செய்ய உத்தரவிட்டார். மேற்படி நிலமானது கடந்த **11.03.2023** அன்று அளவீடு செய்யப்பட்டு, புல எண். **1155/1** எனக்குத்தான் உரிமை உடையது என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அத்துமால் சான்று **11.03.2023** அன்று வழங்கியுள்ளார்.

எனது பட்டா இடத்திற்குள் சட்டவிரோதமாக அரசு மானியத்தை முறைகேடாக பயன்படுத்தி எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களின் குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்து தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும், ஊழல் மற்றும் முறைகேடாக கையூட்டு பெற்றுக் கொண்டும் எனது பட்டா இடத்தில் வீடு கட்டியுள்ளதை அகற்றி மேற்படி எதிரிடையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்தும், இதற்கு உடந்தையாக இருந்த வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து மேற்படி வீட்டை இடித்து முழுமையாக அகற்றிட தகுந்த உத்தரவிட வேண்டுமாய் தங்களை பணிவுடன் பிரார்த்தித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **06.08.2024** நாளிட்ட அறிவிப்பு மூலம் வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆ. சரவணக்குமார், என்பவர் தனது **12.08.2024** நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

" வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் **2016–2017**ன் கீழ் திருமதி செல்வி, க/பெ துரைப்பாண்டி என்பவர் வருவாய்த்துறை மூலம் சர்வே எண். **1157** உள்ள இடத்திற்கு வழங்கப்பட்ட பட்டா எண். **1997/2012** உள்ளிட்ட ஆவணங்களை இணைத்து விண்ணப்பித்ததைத் தொடர்ந்து திருமதி செல்வி, க/பெ துரைப்பாண்டி என்பவரை பயனாளியாக சேர்க்கப்பட்டு பேரூராட்சி அலுவலக செயல்முறைகள் ந.க.எண் **95/2017/அ1,** நாள் **20.03.2017**ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்காணும் நபரால் வீடு கட்டி முடிக்கப்பட்டு வத்தலகுண்டு பேரூராட்சி மூலம் வரிவிதிப்பு எண். **9535**ன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டா நகல், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்ட வேலை உத்திரவு நகல் மற்றும் இதர ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் திரு. செல்வம், த/பெ ஆறுமுகம் என்பவருக்கு சர்வே எண். **1157/20**ல் உள்ள இடத்திற்கு வருவாய்த்துறை மூலம் வழங்கப்பட்ட பட்டா எண். **889**ல் உள்ள இடத்தில் வீடு கட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வத்தலகுண்டு பேரூராட்சி மூலம் வரிவிதிப்பு எண்.**9718**ன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டா நகல், குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் வழங்கப்பட்ட வேலை உத்திரவு நகல் மற்றும் இதர ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, உரிய ஆவணங்களின் அடிப்படையில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளியாக சேர்க்கப்பட்டு வீடு கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரும் 10.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.08.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வி. பாண்டி 10.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

''எனது தாத்தா திரு. சிதம்பரம், என்பவருக்கு சொந்தமான திண்டுக்கல் மாவட்டம், ஆடுசாபட்டியில் புல எண்.1155/1, பட்டா எண்.348ல் ஆடுசாபட்டியைச் சார்ந்த (i) திருமதி செல்வி மற்றும் (ii) திரு. செல்வம் என்ற இருவருக்கும் வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலரால் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், முறைகேடாக விதிமீறி தனது பட்டா இடத்தில் வீடு கட்ட அனுமதியளித்து கட்டடம் கட்டியுள்ளனர்.

எனது பட்டா இடத்தினை அளவீடு செய்யப்பட்டு புல எண்.1155/1 எனக்கு உரிமை உடையது என 11.03.2023 அன்று சான்றானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி செயல் அலுவலர் அரசு திட்டத்தினை முறைகேடாக பயன்படுத்தி எனது பட்டா நிலத்தில் மேற்படி இருவருக்கும் கட்டடம் கட்ட அனுமதி வழங்கி, அவர்கள் முறைகேடாக கட்டடம் கட்டியுள்ளதால், அக்கட்டடத்தை அகற்றி, எனது நிலத்தினை மீட்டு தருமாறும், தவறாக செயல்பட்ட, செயல் அலுவலர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. ஆ. சரவணக்குமார் என்பவர் 10.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

''2016-17 ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வருவாய்த்துறையில் வழங்கப்பட்ட சர்வே எண்.1157, பட்டா எண்.1997/2012 என்ற இடத்தில் திருமதி செல்வி என்பவருக்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டது. மேலும், திரு. செல்வம், என்பவருக்கு சர்வே எண்.1157/20ல் வருவாய்த்துறை மூலம் வழங்கப்பட்ட பட்டா எண்.889 இடத்தில் மேற்காணும் திட்டத்தின் கீழ் வீடுகட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டடம் கட்ட அனுமதியளித்து கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்திற்கு பேரூராட்சியால் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறையால் வழங்கப்பட்ட பட்டா எண்.1997/2012 மற்றும் எண்.889 அடிப்படையில் முறையே திருமதி. செல்வி மற்றும் திரு. செல்வம் என்பவர்களுக்கு வீடு கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இருப்பினும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் ஆக்கிரமிப்பு குறித்து உரிய ஆவணங்களுடன் வருவாய்த் துறையினருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. வி. பாண்டி, என்பவர் தனது 29.07.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட வத்தலகுண்டு புல எண்.1155/1ல் பட்டா எண்.348ல் தனது தாத்தா திரு. சிதம்பரம் என்பவரின் பெயரில் 0.10.50 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட தங்களது பூர்வீக இடத்தில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தினை முறைகேடாக பயன்படுத்தி திருமதி. செல்வி மற்றும் திரு. செல்வம் என்பவர்களுக்கு வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடாக கட்டடம் கட்ட அனுமதியளித்து வீடு கட்டியுள்ளனர் என புகாராக தெரிவித்து, அதனை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

2) மேற்காணும் மனுதாரரின் புகாரினை குறித்து, வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர், 2016–17 ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் திருமதி. செல்வி என்பவர் வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட சர்வே எண்.1157ல் உள்ள இடத்திற்கான பட்டா எண். 1997/2012 அடிப்படையாக கொண்டு திருமதி. செல்வி என்பவரை பயனாளியாக சேர்க்கப்பட்டு வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சியால் கட்டட அனுமதி அளிக்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டுள்ளது, என்பதை செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது.

அதேபோல், திரு. செல்வம் என்பவருக்கு வருவாய்த்துறையால் வழங்கப்பட்ட பட்டா எண்.889ல் கட்டடம் கட்ட அனுமதியானது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு, கட்டப்பட்ட கட்டடத்திற்கு வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சியால் சொத்துவரி மட்டும் விதிக்கப்பட்டுள்ளதை செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

இருப்பினும், மனுதாரர் திரு. பாண்டி என்பவர் பட்டா மாறுதல் கோரிய போது, நிலக்கோட்டை வட்டாட்சியர் தனது குறிப்பாணை ந.க.எண்.10689/2023/ஆ4 நாள் 20.07.2024ல் , நிலக்கோட்டை வட்டம், வத்தலகுண்டு கிராமம், புல எண்.1155/1ல் உள்ள பரப்பு 0.10.50 ஏர்ஸ் நிலத்திற்குரிய பட்டா எண். 348–ல் வினயத்தான் தந்தை சிதம்பரம் என்பவரது பெயரில் கிராம கணக்கில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றும், மேற்கண்ட கிராம புல எண்.1155/1 ல் உள்ள பரப்பு 0.10.50 ஏர்ஸ் நிலத்தில் மனுதாரர் வினயத்தான் மகன் பாண்டி என்பவர் 5 நபர்கள் வீடுகள் கட்டி குடியிருந்து வருவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றக் கோரி மனு செய்துள்ளார் எனவும் மேற்படி தனிநபர் பெயரில் தாக்கலாகியுள்ள நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனக் கோரிய மனு தொடர்பாக மனுதாரர் உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெற்றுக் கொள்ள மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது என வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் நிலக்கோட்டை வட்டாட்சியரின் குறிப்பாணைபடி , மனுதாரர் திரு. பாண்டி என்பவர் புகாராக தெரிவிக்கும் வத்தலகுண்டு புல எண்.1155/1ல் 0.10.50 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட பட்டா எண்.348ல் மனுதாரரது தாத்தா திரு. சிதம்பரம் என்கிற பெயரில் உள்ளது என தெரிவித்துள்ள நிலையில், வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 10.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவர் விசாரணையின் போது, வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மனுதாரர் திரு. பாண்டி என்பவர் புகாராக தெரிவிக்கும் ஆக்கிரமிப்பு குறித்து உரிய ஆவணங்களுடன் வருவாய்த் துறையினருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையை 3 மாதக் காலத்திற்குள் மேற்கொள்ளப்படவேண்டும் என வத்தலகுண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 25 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. வி. பாண்டி,
   க. எண். 7-11-5/3,
   வத்தலகுண்டு தெற்கு தெரு,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28,

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

27/9/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை—600 032